RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 35 | பிப்ரவரி.11 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “முதல்வர் ஸ்டாலினின் பொய்கள் இனி தமிழக மக்களிடம் எடுபடாது” : பழனிசாமி

சென்னை: பிப்.11-

வாயைத் திறந்தால் பொய் சொல்வதையே வாடிக்கையாகக் கொண்டு செயல்படும் ஸ்டாலின் பேச்சு இனி தமிழக மக்களிடம் எடுபடாது என்று முன்னாள் முதல்வரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, பயத்தில் பிதற்றிக் கொண்டிருக்கிறார் முதல்வர் ஸ்டாலின்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற ஒரு விழாவில், 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டை திமுக அழுத்தத்தால் கொண்டு வந்தது போன்ற ஒரு மிகப் பெரிய பொய்யை கட்டமைத்துள்ளார்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய, நடுத்தர மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்றுவதற்காக, மாணவர்களோ, பெற்றோர்களோ, எதிர்க்கட்சியினரோ கோராத போது, எனது மனதில் உதித்த இந்தத் திட்டத்தை நிறைவேற்ற, ஆளுநரின் ஒப்புதலுக்கு கால தாமதமானதால், அந்த நடப்பு கல்வியாண்டிலேயே





நிறைவேற்ற வேண்டும் என்று அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள உரிமையை பயன்படுத்தி, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டை நிறைவேற்றி அரசாணை வெளியிட்டேன்.

‘சத்துணவு திட்டம் என்றால் எம்ஜிஆர்’, ‘தொட்டில் குழந்தை திட்டம் என்றால் ஜெயலலிதா’, 7.5 சதவீத உள் இடஒதுக்கீடு என்றால் எனது தலைமையிலான அரசு’ என்று எங்களது சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். ஏற்கெனவே நான் முதல்வராக இருந்தபோது, சென்னை மாநகராட்சி பள்ளிகளுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தை தனியார் பங்களிப்புடன் அமல்படுத்தினோம். இந்தத் திட்டத்தையே உல்டாவாக்கிய முதல்வர், தான் புதிதாகக் கொண்டுவந்தது போல் தம்பட்டம் அடித்து வருகிறார்.

2021 முதல் நான்கரை ஆண்டு காலமாக தூங்கிவிட்டு, 5 லட்சம் கோடி கடன் வாங்கி, இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கிவிட்டு, நிதியைப் பெருக்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு, ஆட்சி முடியும் தருவாயில் கடந்த 3 மாதங்களாக பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாமலேயே, அடிக்கல் நாட்டுவது; ஒப்பந்தம் கோருவது; மக்களின் வரிப் பணத்தில் விளம்பரம் தேடுவது போன்றவைகளால், தமிழக மக்களை ஏமாற்றலாம் என்று ஸ்டாலின் மனப்பால் குடிக்கிறார்.

தான் ஒரு முதல்வர் பதவி வகிக்கிறோம் என்ற எண்ணம் கூட இல்லாமல், வாயைத் திறந்தால் பொய் சொல்வதையே வாடிக்கையாகக்கொண்டு செயல்படும் ஸ்டாலினின் பேச்சு இனி தமிழக மக்களிடம் எடுபடாது. `பொய்யாலும், விளம்பரத்தாலும் உயர்ந்தவன் வாழ்க்கை நிலைக்காது’ என்பதை ஸ்டாலின் உணரும் காலம் விரைவில் வர உள்ளது. இனியாவது இதுபோன்ற பொய்யை கட்டமைப்பதை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்” என்று எடப்பாடி பழனிபீசாமி கூறியுள்ளார்.



■ விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், ஆவியூர் ஊராட்சியில் நேற்று (10.02.2026) நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ், பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த சிறப்பு மருத்துவ முகாமில், 3 நபர்களுக்கு மருத்துவ காப்பீடு அட்டைகளையும், 5 தூய்மை காவலர்களுக்கு தொழிலாளர் நல வாரிய அட்டைகளையும், 2 நபர்களுக்கு மாற்றுத் திறனாளி அடையாள அட்டைகளையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார். தேசிய குடற்புழு தினத்தினை முன்னிட்டு குடற்புழு உறுதிமொழியினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். மேலும், குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சியர் மாணவர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்வில், விருதுநகர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யசோதாமணி, மருத்துவத்துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## வேலூரில் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தினர் தர்ணா போராட்டம்

வேலூர், பிப்.11

வேலூர் மாவட்டத்தில் தேர்தல் கால வாக்குறுதிகளின் படி 70வயது நிறைவடைந்த ஓய்வூதியர்களக்கு 10 சதவிகிதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்கவும், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்ட குறைபாடுகளை சரி செய்ய வேண்டியும், சத்துணவு, அங்கன்வாடி மற்றும் ஊராட்சி உதவியாளர்களுக்கான குறைந்த பட்ச ஓய்வூதியம் ரூபாய் 7850/ ஆக வழங்கவும் தொகுப்பாக பெற்ற ஓய்வூதியம் (கமுடேசன்) பிடித்தம் செய்யும் காலத்தை 11 ஆண்டுகளாக குறைத்தல், மருத்துவ காப்பீட்டு திட்ட குறைபாடுகளை சரிசெய்தல் உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி

தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்ட முடிவின் அடிப்படையில் மாநிலம் தழுவிய அளவில் மாவட்ட தலைநகங்களில் தர்ணா போராட்டம் நேற்று 10.02.2026 செவ்வாய்கிழமை காலை 10 மணியளவில் வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலர் எதிரில் நடைபெற்றது.

மாவட்ட தலைவர் எம்.பன்னீர்செல்லம் தலைமை தாங்கினார். மாவட்ட பொருளாளர் பி.ஞானசேகரன் வரவேற்று பேசினார். மாவட்ட செயலாளர் பி.குமரேசன் கோரிக்கை விளக்கவுரையாற்றினார்.

தமிழ்நாடு ஓய்வுபெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர் நலச்சங்க மாவட்ட தலைவர் முனைவர். செ.நா.ஜனார்த்தனன், அகில இந்திய பி.எஸ்.என்.எல் ஓய்வூதியர் சங்க மாநிலத்தலைவர் சி.ஞானசேகரன், ஓய்வூதியர் சங்க ஒருங்கிணைப்பு குழுவின் மாவட்ட செயலாளர் பி.லோகநாதன், அஞ்சல் ஆர்.எம்.எஸ்.ஓய்வூதியர் சங்க மாநில பொருளாளர் எ.கதிர்அகமது மற்றும் வட்டக்கிளை நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர் மாநில செயலாளர் பா.ரவி சிறப்புரையாற்றினார். முடிவில் மாவட்ட இணை செயலாளர் ஜேயசந்திர பாக்கியராஜ் நன்றி கூறினார். தர்ணா போராட்டத்தில் வேலூர், காட்பாடி, அணைக்கட்டு, கே.வி.குப்பம், குடியாத்தம், பேர்ணாம்பட்டு உள்ளிட்ட ஒன்றியத்திலிருந்து 50 பெண் தோழர்கள் உள்பட 200க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் பங்கேற்றனர். தேர்தல் கால வாக்குறுதிகளின் படி 70 வயது நிறைவடைந்த அனைத்து ஓய்வூதியதாரருக்கும் 10 சதவிகிதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும், வழங்க வேண்டும், ஓய்வூதிய காப்பீட்டு தாரருக்கு காசில்லா மருத்துவம் உறுதி செய், உறுதிசெய் தமிழக அரசே உறுதி செய். உள்ளிட்ட கோஷங்களை எழுப்பினர்..

## தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் பள்ளி மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர்

தேனி பிப்.11

தேனி மாவட்டம், கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் பள்ளி மாணவர்கள் ஏற்றுக்கொண்டனர்.

தேசிய குடற்புழு நீக்க தினம், பிப்ரவரி 10 மற்றும் ஆகஸ்ட் 10 ஆகிய இரண்டு தினங்கள் என 6 மாதத்திற்கு ஒரு முறை அனுசரிக்கப்படுகிறது. குறிப்பாக, 1 முதல் 19 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படுகின்றது.

தேனி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதியில் வாழும் 1 வயது முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும் மற்றும் 20 வயது முதல் 30 வயதுடைய பெண்களுக்கும் இப்பருவத்தில் குடற்புழு தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனை தடுக்கும் விதமாக தேசிய குடற்புழு நீக்க முகாம் இன்றும் (10.02.2026) விடுபட்ட குழந்தைகளுக்கு (Mop up day) 17.02.2026 அன்றும் அனைத்து துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் நடைபெற உள்ளது.

1 வயது முதல் 19 வயது வரை உள்ள குழந்தைகள், மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களிலும், 20 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட பெண்களுக்கும் அங்கன்வாடி மையத்திலும் "அல்பெண்டசோல் "எனும்

குடற்புழுநீக்கம் செய்யும் மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது. குடற்புழு நீக்க அல்பெண்டசோல் மாத்திரை உட்கொள்வதினால்,





குடற்புழுக்கள் முற்றிலுமாக நீக்கப்படுகிறது. இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை தடுக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து சுறுசுறுப்பாக இருக்க உதவுகிறது. நினைவாற்றல், கற்றல்திறன் மற்றும் உடல் வளர்ச்சியை மேம்படுத்தவும், உடல் ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.

தேனி மாவட்டத்தில் உள்ள 162 துணை சுகாதார நிலையங்களில் கிராம சுகாதார செவிலியர்கள் மூலமும், 2,68,926 குழந்தைகளுக்கு பள்ளி மற்றும் கல்லூரிகள் மூலமும், 20 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட 68,082 பெண்களுக்கு,

1,065 ஊட்டச்சத்து மையங்களில் ஊட்டச்சத்து பணியாளர்கள் மூலமும் என மொத்தமாக 3,37,008 அல்பெண்டசோல் எனும் குடற் புழுநீக்கம் மாத்திரைகள் சுகாதாரத்துறையின் மூலம் வழங்கப்படவுள்ளது.

அந்த வகையில், இன்றையதினம் கொடுவிலார்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புகு நீக்க நாள் உறுதிமொழியான, ‘குடற்ழு தொற்றை குறைத்து வளமான எதிர்காலத்திற்கு வித்திடுவோம்’ என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடு, உடற்சோர்வு கற்றல் சிரமம் மற்றும் நோய் தொற்றுகளை தடுக்க முடியும் என்பதை நான் அறிவேன். மேலும், குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதால், உடல் வளர்ச்சி அறிவுத்திறன் மற்றும் நோய்களுக்கு எதிரான எதிர்ப்பு சக்தி மேம்படும் என்பதையும் நான் நன்கு அறிவேன். நானும், எனது சுற்றத்தினரும், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்போம் என்றும், கழிவறையை முறையாக பயன்படுத்துவோம் என்றும், சாப்பிடும் முன்பும் பின்பும் கைகளை சோப்புடன் சுத்தமாக கழுவுவோம் என்றும் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்ப்போம் என்றும் உறுதியளிக்கிறேன். குடற்புழு நீக்க மாத்திரையை உட்கொள்வதின் மூலம், குடற்புழு தொற்றில்லா. இரத்த சோகை இல்லா தமிழ்நாட்டை உருவாக்க ஒத்துழைப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன் என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் பள்ளி மாணவர்கள், அரசு அலுவலர்கள் ஏற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். குழந்தைகள், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள், பெண்கள் ஆகியோர் தவறாமல் குடற்புழு நீக்கம் செய்யும் மாத்திரைகளை உட்கொண்டு, உடல்நலத்தை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், அப்பள்ளி வளாகத்தில் செயல்படும் அங்கன்வாடி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் மாவட்ட தாய்சேய் நல அலுவலர் திருமதி செல்வி, முதன்மைக் கல்வி அலுவலர் நாகேந்திரன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ரேவதி, வட்டார மருத்துவ அலுவலர் திருமதி கலைச்செல்வி, நலக்கல்வியளர் சுப்பிரமணி மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## “காங்கிரஸ் உடனான கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை” : கனிமொழி திட்டவட்டம்

ராமநாதபுரம்: பிப்.11-

“திமுக தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணியில் எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம்” என திமுக எம்.பி கனிமொழி தெரிவித்தார்.

கனிமொழி தலைமையிலான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு ராமநாதபுரத்தில் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்தது. இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி, “ மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், மத அமைப்புகளை சேர்ந்த பலரும் எங்களை சந்தித்து தங்கள் கருத்துக்களை பகிர்ந்துள்ளனர்.



அவற்றையெல்லாம் பரிசீலித்து திமுக தேர்தல் அறிக்கையில் சேர்ப்போம்.

2021 ஆம் சட்டப்பேரவை தேர்தலுக்கு திமுகவின் தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. அதில் 400க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளோம். ஒன்றிய அரசு நமக்கு எதிராக செயல்படுவதால் சில வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலவில்லை. சில வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளன.

இந்த திமுக ஆட்சியில் மாணவர்கள், பெண்களுக்கு அதிகளவிலான திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அதனை எங்கள் தேர்தல் பிரச்சாரத்தில் முன்னிலைப்படுத்துவோம். அரசு ஊழியர்கள் உள்ளிட்டோர் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் கோரிக்கைகளை முதல்வர் கேட்டு பலவற்றை நிறைவேற்றி வருகிறார்.

ஆட்சியில் பங்கு வேண்டும் என சில தனி நபர்கள் பேசுகிறார்கள், அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாது. திமுக தலைமைக்கும், காங்கிரஸ் தலைமைக்கும் இணக்கமான நல்லுறவு உள்ளது. அதனால் கூட்டணிக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. வரக்கூடிய தேர்தலில் நிச்சயமாக இணைந்து செயல்படுவோம். காங்கிரஸுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும்” என்றார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 7.16 லட்சம் பேருக்கு இலவச ஆல்பெண்டாசோல் மாத்திரைகள் - தேசிய குடற்புழு நீக்க முகாம் தொடக்கம்




கிருஷ்ணகிரி, பிப்.11-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை சார்பில் தேசிய குடற்புழு நீக்க முகாம் தொடங்கப்பட்டது. இம்முகாமை கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச.தினேஷ் குமார், இ.ஆ.ப., பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தே. மதியழகன் ஆகியோர் துவக்கி வைத்து, மாணவியர்களுக்கு ஆல்பெண்டாசோல் மாத்திரைகள் வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. தினேஷ் குமார், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 1,796 அங்கன்வாடி மையங்கள், 270 துணை சுகாதார நிலையங்கள், 63 ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் 1 முதல் 19 வயது வரை உள்ள 5,52,417 குழந்தைகள் மற்றும் 20 முதல் 30 வயது வரை உள்ள 1,64,549 பெண்கள் என மொத்தம் 7,16,966 நபர்களுக்கு இலவசமாக ஆல்பெண்டாசோல் மாத்தி ரைகள் வழங்கப்படுகின்றன. விடுபட்ட குழந்தைகளுக்கான முகாம் வரும் 17.02.2026 அன்று நடைபெற உள்ளது என்றார். மேலும், 1 முதல் 2 வயது குழந்தைகளுக்கு 200 மி.கி. ஆல்பெண்டாசோல் மாத்திரையும், 2 முதல் 19 வயது சிறுவர்கள் மற்றும் கருவுறாத, பாலூட்டாத 20 முதல் 30 வயதுக்குட்பட்ட பெண்களுக்கு 400 மி.கி. ஆல்பெண்டாசோல் மாத்திரையும் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இம்மாத்திரைகள் உட்கொள்வதன் மூலம் குடற்புழு தொற்று முழுமையாக நீங்குவதுடன், இரத்தசோகை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு குறைந்து, குழந்தைகளின் உடல் வளர்ச்சி, எடை உயர்வு, நோய் எதிர்ப்பு சக்தி, அறிவாற்றல் மற்றும் சுறுசுறுப்புத் தன்மை மேம்படும் என அவர் கூறினார். உலகளவில் மண் மூலம் பரவும் குடற்புழு தொற்று (STH) 24 சதவீத மக்களை பாதித்துள்ளதாகவும், அதில் இந்தியா மட்டும் 25 சதவீத பங்களிப்பை வழங்குவதாகவும் (WHO ஆதாரம்), தமிழ்நாட்டில் இத்தொற்று 25 சதவீதம் வரை காணப்படுவதாகவும் மாவட்ட ஆட்சித்தலைவர் குறிப்பிட்டார். திறந்த வெளியில் மலம் கழித்தல், தொற்றுடைய மண், மண்ணில் விளையும் பொருட்கள் மற்றும் மண்ணுடன் நேரடி தொடர்பு ஆகியவற்றின் மூலம் குடற்புழு தொற்று ஏற்படுகிறது என்றும் அவர் விளக்கினார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழி எடுக்கப்பட்டது. வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதன் மூலம் உருண்டைப்புழு, சாட்டைப்புழு, கொக்கிப்புழு போன்ற தொற்றுகளை ஒழிக்க முடியும் என்றும், சுகாதார பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் குடற்புழு தொற்றில்லா, இரத்தசோகை இல்லா தமிழ்நாடு உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. ரமேஷ் குமார், வட்டார மருத்துவ அலுவலர் மரு. இனியள் மண்டோதரி, நகராட்சி ஆணையாளர் திரு. சதீஷ் குமார், நகர்மன்றத் தலைவர் (பொ) திருமதி. சாவித்ரி, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் திருமதி. நளினி, நகர்மன்ற உறுப்பினர்கள் திரு. வேலுமணி, திருமதி. யாஷ்மின் அஸ்லாம், துறை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டம், கோத்தகிரி நகராட்சி பேருந்து நிலையத்தில் இன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் சாதனை விளக்கப்புகைப்படக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டனர்.




## உலகம் உங்கள் கையில் மடிக்கணினி வழங்குதல்

நாகர்கோவில், பிப்.11-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு உலகம் உங்கள் கையில் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் இலவச மடிக்கணினியினை கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், குருசடி ஹோலி கிறாஸ் மகளிர் கல்லூரியில் பயிலும் 415 மாணவிகளுக்கு வழங்கும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாகர்கோவில் மாநகராட்சி மேயர் .ரெ.மகேஷ். கலந்து கொண்டு மாணவிகளுக்கு மடிக்கணினியினை வழங்கினார். உடன் கல்லூரி தாளாளர் அருட்சகோதரி மேரி ஹில்டா கல்லூரி முதல்வர் அருட்சகோதரி. சகாய செல்வி பகுதி செயலாளர்கள் சேக்மீரான், ஜீவா மாவட்ட பிரதிநிதி தொல்லவிளை குமார் தி மு க நிர்வாகிகள் நாகராஜன்,. ஜஸ்டின் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## பர்கூர் பேரூராட்சியில் அடிப்படை வசதிகள் மேம்பாடு – ரூ.232 லட்சம் திட்டங்கள் ஆரம்பம்

கிருஷ்ணகிரி, பிப்.11

பர்கூர் பேரூராட்சியில் ரூ.232 லட்சம் மதிப்பிலான சாலை மற்றும் வடிகால் அமைப்புப் பணிகள் பூமி பூஜையுடன் தொடங்கி வைக்கப்பட்டன.


கலைஞர் நகர்புற மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் ரூ.177 லட்சத்தில் மண் சாலைகள் தார்சாலைகளாக மாற்றப்படும் பணிகளும், பொது நிதியில் ரூ.30 லட்சத்தில் புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்கும் பணிகளும் துவங்கின. மேலும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.25 லட்சம் மதிப்பில் பல்வேறு பகுதிகளில் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பூமி பூஜை நிகழ்ச்சியில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர். பேரூராட்சி தலைவர், கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த பணிகள் நிறைவடைந்தால், பர்கூர் பேரூராட்சியில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் அமைப்புகள் மேம்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என தெரிவிக்கப்பட்டது



■ தேனி மாவட்டம் கோட்டூர் கிராமத்தில் மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இறுதியாண்டு பயிலும் மாணவி ஷர்மிலி கிராமப்புற அனு பவ திட்டத்தின், (RAWE) கீழ் பயிற்சி பெற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக கோட்டூர் கிராமத்தில் நெல் இலை சுருட்டு பூச்சிக்கான ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியின் போது, பண்பாட்டு, இயந்திர, உயிரியல் மற்றும் வேதியல் முறைகளை பயன்படுத்தி இலை சுருட்டு பூச்சிகளின் பாதிப்பை பயிர்களில் கட்டுபடுத்தலாம் என்று விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது. இதன் மூலம் நச்சுதன்மை வாய்ந்த இரசாயன பூச்சிகொல்லி பயன்பாட்டை கட்டுபடுத்தலாம். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இந்த பயிற்சி விளக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், தங்களது தோட்டங்களில் உடனடியாக இம்முறையை நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.



■ மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் அரங்கில் 20.26.2027 ஆம் ஆண்டு வரவு செலவு (பட்ஜெட்) திட்ட அறிக்கையினை மாண்புமிகு துணை மேயர் / மேயர் (பொ) தி.நாகராஜன் வெளியிட்டார் அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், உடன் உள்ளார்



■ செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட சாத்தாங்குப்பம் கமலா நகரில் அமைந்துள்ள, அருள்மிகு ஸ்ரீ ராஜகணபதி நூதன ஆலயம்,ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத, ஸ்ரீ சிவசுப்பிரமணியர், ஸ்ரீ கால பைரவர் மற்றும் நவகிரகங்களுக்கு மூன்று நாட்களாக யாக சாலையில் சிவாச்சாரியார்களால் வேதம் மந்திரங்கள் ஓதப்பட்டு, பூஜிக்கப்பட்ட புனித நீரை மங்கள வாத்தியம் மேலும் வான வேடிக்கையுடன் சிவாச்சாரியார்கள் மூலம் கோவிலின் மேலே கொண்டு செல்லப்பட்டு கோபுர கலசத்தின் மீது ஊற்றி பக்தர்கள் மேல் புனிதநீரை தெளித்தனர். பின்பு சாமி அலங்காரம் தீப ஆராதனை நடைபெற்றது. வருகை தந்து சாமி தரிசனம் செய்த அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது. கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணி எல்லையப்பன், சாத்தாங்குளம் விரிவாக்க பகுதி குடியிருப்போர் நல சங்கத் தலைவர் எக்ஸ்பிரஸ் எல்லையப்பன், ஆலய தலைவர் முருகேசன் மற்றும் ஆலய நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் அனைவரும் இணைந்து சிறப்பாக செய்திருந்தனர்.




■ சென்னை வேளச்சேரி, காந்தி ரோடு தண்டீஸ்வரம் கோயில் எதிரில் மெயின் ரோட்டில் எஸ் எஸ் ஹைதராபாத் பிரியாணி கடை, கிளை திறப்பு விழா வெகு கோலாகலமாக திறக்கப்பட்டது.



## பம்மல் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் துணை மேயர். காமராஜ் 1வது மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி தொடங்கி வைத்தனர்

பம்மல், பிப்.11-

மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார் அதனை தொடர்ந்து,

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட தூய்மை பணியாளர்களை கௌரவிக்கும் வகையில், அவர்களுக்கு உணவு வழங்கும் சிறப்பு திட்டம் இன்று பம்மல் பகுதியில் நடைபெற்றது.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பம்மல் சமூகநலக் கூடத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியை தாம்பரம் மாநகராட்சி துணை மேயர். காமராஜ் மற்றும் 1வது மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நகரின் தூய்மையை பாதுகாக்க தினமும் கடின உழைப்பை மேற்கொண்டு வரும் தூய்மை பணியாளர்களின் சேவையை பாராட்டும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது. காலை முதலே பணியில் ஈடுபட்டிருந்த மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்து உணவு அருந்தினர்.

நகரை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க தூய்மை பணியாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. வெயில், மழை உள்ளிட்ட கடினமான கால நிலையையும் பொருட்படுத்தாமல் அவர்கள் தினமும் சேவை செய்து வருகின்றனர். அவர்களின் அர்ப்பணிப்பை மதிக்கும் வகையில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த உணவு வழங்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் துணை மேயர் காமராஜ். 1 வது. மண்டல குழு தலைவர் வே கருணாநிதி. தூய்மை பணியாளர்களுடன் அமர்ந்து கலந்துரையாடி உணவருந்தினர்.

மேலும் தாம்பரம் மாமன்ற உறுப்பினர்கள் மதினா மேகம், சத்யாமதியழகன், ரம்யா சத்தியபிரபு, மாநகராட்சி. உதவி ஆணையர் ஸ்வர்ணலதா, மண்டல பொறியாளர் சத்தியசீலன், சுகாதார அலுவலர் மாரிமுத்து, மற்றும் ஆய்வாளர்கள். மாமன்ற உறுப்பினர்கள். உட்பட நகராட்சி பணியாளர்கள். சமூக ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கலந்து கொண்டு உணவு வழங்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த மனிதநேய முயற்சிக்கு தூய்மை பணியாளர்கள் நன்றி தெரிவித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்களுக்கான குறைதீர் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் அவர்கள், சுதந்திர போராட்ட தியாகிகள் மற்றும் வாரிசுதாரர்களிடம் கோரிக்கை மனுக்களை இன்று (10.02.2026) பெற்றுக்கொண்டார். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் ரீஷாஜகான், மாவட்ட வழங்கல் அலுவலர் கீதாராணி, ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட தியாகிகள் மாநில தலைவர் வரதன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# எக்காலத்திலும் போற்றப்பட வேண்டிய விஞ்ஞானி எடிசன்

முன்னுரை:

" துணிந்தால்
தோல்வியை
துரத்தலாம் "

உலகின் தலைசிறந்த ஓவியர் என்று லியானார்டோ டாவின்சியை கூறுகிறோம். டாவின்சியைப் போல ஓவியம், சிற்பம் மற்றும் கட்டிடக் கலைகளை அதிகமாகக் கற்றுத் தேர்ந்தவர் என்று இவ்வுலகில் பிறப்பவர் மிக அரிது. இத்தனை சிறப்புகளுடன் அவர் தத்துவஞானி என்ற உயரிய பண்பையும் பெற்றிருந்தார். அதுபோல விஞ்ஞானிகள் பலர் ஏதாவது ஒரு அல்லது ஒரு சில விஷயங்களுக்காக இவ்வுலகில் நினைவு கூர்ந்து போற்றப்படுபவர். ஆனால், தாமஸ் ஆல்வா எடிசன் உலகில் எப்போதும் அனைவராலும் கொண்டாடப்படக்கூடிய ஒரு விஞ்ஞானியாக இருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய கண்டுபிடிப்புகளே ஆகும்.

தாமஸ் ஆல்வா எடிசன் உலகின் தலைசிறந்த அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் ஆவார். மின்விளக்கு, போனோகிராஃப் (ஒலிப்பதிவு கருவி), மற்றும் சினிமா கேமரா உள்ளிட்ட 1,000க்கும் ஏற்பட்ட கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார். புகழ்மிக்க இவரின் வாழ்க்கை வரலாறு 'யங் டாம் எடிசன்' மற்றும் 'எடிசன் தி மேன்' என்ற பெயர்களில் திரைப்படமாக்கப்பட்டு மக்களை வெகுவாகக் கவர்ந்தது.

ஆரம்பகால வாழ்க்கை:


அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தின் மிலன் பகுதியில் பிப்ரவரி 11, 1847 ஆம் ஆண்டு சாமுவேல் எடிசன் நான்சி தம்பதியினருக்கு மகனாக தாமஸ் ஆல்வா எடிசன் பிறந்தார்.

8 வயதில் பள்ளியில் மந்தமானவர் என வெளியேற்றப்பட்டாலும், தாயின் ஊக்கத்தால் தன்முனைப்புடன் படித்து, மென்லோ பார்க் என்ற இடத்தில் உலகின் முதல் தொழில்முறை ஆராய்ச்சிக்கூடத்தை நிறுவி பல சாதனைகளைப் புரிந்தார். அவரின் ஆராய்ச்சிக் கூடம் இருந்த மென்லோ பார்க் பிற்காலத்தில் எடிசன் நகர் என்று அழைக்கப்பட்டும் அளவிற்கு மாறியது அவரின் விஞ்ஞான புரட்சிக்கு மணிமகுடமாகும்.

எடிசனின் ஆராய்ச்சிக்கு தேவையான ஆய்வுக்கூடத்தை பெற்றோர்கள் அவருக்கு வீட்டிலேயே ஏற்படுத்திக் கொடுத்தனர். தன் ஆராய்ச்சிப் பணிகளுக்கு தேவையான பணத்தை பெற்றோர்களிடமிருந்து தொடர்ந்துபெற விரும்பாத எடிசன் தோட்டத்தில் காய்கறிகளையும் ரயிலில் பத்திரிகைகள் மற்றும் உணவுப் பொருளை விற்றும் ஈடு செய்தார்.

ஆராய்ச்சிப் பணியில் அசத்திய எடிசன்:

அச்சடிக்கும் பழைய இயந்திரம் ஒன்றை வாங்கிய எடிசன் கிராண்ட் ட்ரங்க் ஹெரோல் என்ற பத்திரிக்கையை ஆரம்பித்தார். ரயிலில் தயாரிக்கப்பட்டு ரயிலிலேயே விற்பனையான உலகின் முதல் பத்திரிக்கை என்ற சிறப்பை அது பெற்றது. நகரம் மட்டுமல்லாமல் கிராமத்திற்கும் செய்திகள் உடனுக்குடன் இதன் மூலம் கொண்டு சேர்க்கப்பட்டது. தனக்கான ஆராய்ச்சிக் கூடத்தை ரயிலிலும் அமைத்துக் கொண்டார்.



எடிசன் தந்திக் கருவிகளை கண்டுபிடித்தார். ஆரம்பத்தில் அதற்கு வரவேற்பு இல்லை. அதன் பிறகு அதன் நிலை முற்றிலும் மாறியது. பொறியில் சிக்கும் எலியை மின்சாரத்தைக் கொண்டு கொல்லும் கருவியையும் கண்டுபிடித்தார். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தை கண்டுபிடித்த எடிசன் அதை 1868 ஆம் ஆண்டு பதிவு செய்தார். பங்குச் சந்தைக்கு உதவும் கருவிகளை அந்தக் காலத்திலேயே கண்டுபிடித்து அசத்தினார்.

தபால் மற்றும் கடிதங்களின் ஒட்டக்கூடிய ஸ்டாம்ப் நாம் அறிந்ததே. அதற்கு முன்னோடியாக பசை தடவிய பேப்பரை எடிசன் கண்டுபிடித்தார். ஸ்டென்சில் மெஷினும் அவருடைய கண்டுபிடிப்பு தான்.

திருமணத்திற்குப் பிறகு நியூயார்க் அருகில் உள்ள மென்லோ பார்க் என்னும் இடத்தில் தன் ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவிய எடிசன் ஒலிப்பதிவு கருவிகள், பேசும் குழாய்கள், பட்டர் பேப்பர், பச்சை குத்தும் மெஷின் என பல பொருட்களைக் கண்டுபிடித்து அவற்றை இந்த உலகிற்கு சொந்தமாக்கினார்

அலெக்சாண்டர் கிரகாம் பெல்லின் தொலை பேசியில் புதுமைகளைப் புகுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற தொலைபேசியை கொண்டு வந்தார்.

போனோகிராஃப் என்ற இசைத்தட்டு மூலம் பாடும் கருவியை கண்டுபிடித்தார். தனது முதல் குழந்தையின் குரலை அந்தக் கருவியில் பதிவு செய்து கேட்டு மகிழ்ந்தார். இன்றும் கூட எடிசன் கண்டுபிடித்த அந்த இசைத்தட்டு லண்டன் மியூசியத்தில் உள்ளது. நீண்ட காலம் பாதுகாக்கும் வகையிலும், பதிவு செய்ததை அழித்துவிட்டு வேறு ஒன்றை பதியும் வகையிலும் போனோகிராஃப் இருந்தது.

1879 ஆம் ஆண்டு மின் விளக்கை இவ்வுலகிற்கு அறிமுகம் செய்து தனது அறிவியல் ஆராய்ச்சியில் உச்சம் தொட்டார். ஒரு கட்டத் தில் இவரது நிறுவன த்தில் வேலை பார்த்த தொழிலாளர்கள் சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தால் மின்விளக்கு உற்பத்தி பாதிக்கப்படுவதை அறிந்த எடிசன் அதற்கும் விடைதேடினார். ஆம், மின்விளக்கு உற்பத்தி செய்யும் கருவியையும் அவர் கண்டுபிடித்தார்.

இவ்வுலகிற்கு வெளிச்சத்தைக் கொடுத்த, அதாவது மின்சாரம் வர காரணமாக இருந்த எடிசன் உலகின் முதல் மின் நிலையத்தை பிராக்டன் என்னுமிடத்தில் நிறுவினார். பிரான்சிலும், இத்தாலியிலும் மின் நிலையங்கள் அமைத்துக் கொடுத்தார்.

எடிசன் கண்டுபிடித்த பேட்டரி மூலம் ரயில், பஸ், கார் ஆகியவை இயக்கப்பட்டன. பெட்ரோலியப் பொருட்கள் பயன்பாட்டிற்கு வரும் வரை எடிசனின் பேட்டரி வாகனங்கள் இவ்வுலகில் பிரபலமாக இருந்தது. பாறைகளில் படிந்திருக்கும் இரும்பு தாதுவை பிரித்தெடுக்கும் ஓர் அற்புதக் கருவியை கண்டுபிடித்தார். தரமான சிமெண்ட் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதில் வெற்றி பெற்றார்.

நீராவி இயந்திரத்தில் ஓடிக்கொண்டிருந்த ரயில் அதிக புகையை உமிழக் கூடியதாகவும், அதிக சத்தத்தைக் கொண்டதாகவும் அந்தக் காலத்தில் இருந்தது. அதற்கு முடிவு கட்ட எண்ணிய எடிசன் மின்சாரத்தில் இயங்கும் ரயில் என்ஜினை கண்டுபிடித்தார்.

உலகின் மிகச்சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக இன்றளவும் இருக்கக்கூடிய சினிமாப் படங்களை திரையிட உதவும் ப்ரொஜெக்டர்களை இந்த உலகிற்கு வழங்கிய கொடையாளர் எடிசன் என்று சொன்னால் அது மிகையாகாது.

முடிவுரை:

ஒரே ஒரு அறிவியல் அறிஞரை இந்த உலகம் உள்ளவரை நினைவில் கொள்ள வேண்டும் என்றால் அது தாமஸ் ஆல்வா எடிசனாக மட்டுமே இருக்க முடியும். தனது நீண்ட மற்றும் தொடர் ஆராய்ச்சிகள் மூலம் 1093 ஆகச் சிறந்த கண்டுபிடிப்புகளை இந்த உலகிற்கு வழங்கிய ஆராய்ச்சியாளர் தாமஸ் ஆல்வா எடிசன் மட்டுமே.

வெற்றி என்பது ஒரே முயற்சியில் கிடைப்பதில்லை. இது எந்தத் துறைக்கும் பொருந்தும். ஒவ்வொரு தோல்வியிலிருந்தும் புதிய பாடத்தைக் கற்றுக் கொண்டார். எடிசன். தோல்வியின் அடுத்த முனை வெற்றி என்பதை இவ்வுலகிற்கு புரிய வைத்தார். தோல்விகள் பல தொடர்ந்தாலும், வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்ற உந்துதலுடன் போராடினால் வெற்றி கிடைக்கும் என்பதை இவ்வுலகிற்கு தனது வாழ்வு மூலம் எடுத்துக்காட்டிய விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்.

"என் முயற்சிகள்
என்னை பலமுறை
கைவிட்டதுண்டு
ஒருபோதும்
என் முயற்சியை
நான் கைவிட்டதில்லை "

மேலே கூறப்பட்டுள்ள வார்த்தைகள் தாமஸ் ஆல்வா எடிசனின் வார்த்தைகள். தினந்தோறும் 4 மணி நேரம் மட்டுமே தூங்கும் பழக்கம் கொண்ட எடிசன் 18 மணி நேரத்தை தன் ஆராய்ச்சிப் பணிகளுக்காக செலவிடுவார்.

அதுமட்டுமல்ல வாழ்வில் வெற்றி பெற வேண்டுமானால் பல அவமானங்களையும் ஏளனங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் சரித்திரம் நம்மைப் பற்றி பேசும் என்று சக மனிதர்களுக்கு எடுத்துக்காட்டக்கூடிய சரித்திர நாயகன் தான் தாமஸ் ஆல்வா எடிசன். சோதனைகளையெல்லாம் சாதனையாக்கலாம் என்பதற்கு ஒரு முடிவில்லா இலக்கணமாக திகழ்ந்தார் எடிசன்.

தன்னம்பிக்கையை தளர்த்திக் கொள்ளாதவன் வாழ்வில் தோல்வி என்பது நிரந்தரம் கிடையாது என்பதை புரிந்தவர் எடிசன்.

அக்டோபர் 18, 1931 ஆம் ஆண்டு தனது 84 ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை விட்டு மறைந்தார் தாமஸ் ஆல்வா எடிசன். மின்சாரத்தை இவ்வுலகிற்கு அர்ப்பணித்த அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக அமெரிக்கா முழுவதும் அன்று ஒரு நிமிடம் மின்விளக்குகள் அணைக்கப்பட்டன. மின்சாரம் நிறுத்தப்பட்டது. " மின்சாரம் இல்லாத போது அவரை அனைவரும் நினைத்துப் பாருங்கள் என்பது அதன் அர்த்தம். அந்த ஒரு நிமிடம் மட்டுமல்ல இந்த உலகம் அன்றும் இன்றும் என்றும் என்றென்றும் தாமஸ் ஆல்வா எடிசனை நினைவு கூரும்.

என் முயற்சிகள் என்னை பலமுறை கைவிட்டதுண்டு; ஒருபோதும் என் முயற்சியை நான் கைவிட்டதில்லை தாமஸ் ஆல்வா எடிசன்.

மகா பிரபு,



ஆசிரியர்/ கட்டுரையாளர்,
கல்லல் முருகப்பா
மேல்நிலைப்பள்ளி,
கல்லல் 630 305,
சிவகங்கை மாவட்டம்,
அலைபேசி: 9944089151




# கீழக்கோட்டையில் தேசிய குடற்புழு நீக்கநாளில் அல்பென்டசோல் மாத்திரை வழங்குதல் நிகழ்ச்சி

காளையார் கோவில், பிப்.11-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க நாளில் மாணவ மாணவிகளுக்கு அல்பென்டசோல் மாத்திரைகள் வழங்கப்பட்டன. பள்ளியின் தலைமை ஆசிரியர் தெய்வானை தலைமை வகித்தார். ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியை கீதா வரவேற்புரையாற்றினார். பள்ளியின் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி 1முதல் 19 வயதுள்ளோர் ஆறு மாதத்திற்கொருமுறை அல்பென்டசோல் மாத்திரை உட்கொள்ள வேண்டும் என்றும் வாரந்தோறும் வியாழக்கிழமை இரும்புச் சத்து மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பள்ளி மாணவ மாணவிகள் அனை வருக்கும் தலைமை ஆசிரியை தெய்வானை மாத்திரைகளை உட்கொள்ள வழங்கினார். குடற்புழு தொற்றை நீக்குவோம். ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்கு வோம் என மாணவ மாணவிகள் முழக்கமிட்டனர். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி நன்றி கூறினார். ஆசிரியர்கள் கமலம்பாய் வாசுகி கணினி பயிற்றுநர் வித்யா பள்ளி மேலாண்மை குழு செயற்குழு உறுப்பினர்கள் சத்துணவு உதவியாளர்கள் அஞ்சலை கஸ்தூரி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிட்லபாக்கம், முத்துலஷ்மி நகர் பொது நலசங்கத்தின் 35வது ஆண்டு விழாவில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர அயலக அணி அமைப்பாளர் துரை.சிவகுமார், தாம்பரம் மாநகர தொழிலாளர் அணி அமைப்பாளர் சிட்லபாக்கம் இரா.விஜயகுமார், 43வது வட்ட துணை செயலாளர்கள் ச.ஜெகன்நாதன், மாமன்ற உறுப்பினர்கள் சி.ஜெகன், சி.பரிமளா, குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் எல்.சுந்தரராமன், எஸ்.சேகர், டி.சிவய்யா, வி.யோகானந்த், ஆர்.எம்.ஈஸ்வரன், மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# தூய்மை பணியாளர்களுக்கு காலை உணவு சிற்றுண்டி திட்டம் கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தலைமையில் நகர் மன்ற தலைவர் துவக்கி வைத்தார்

தென்காசி, பிப்.11-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் மற்றும் புளியங்குடி நகராட்சிகளில் தூய்மை பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம் வெகு விமர்சையாக துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சிக்குட்பட்ட தனியார் மண்டபத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர்.இ.ஆ.ப அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.தி.சதன் திருமலைக்குமார் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தூய்மை பணியாளர்களுக்கு உணவுகளை பரிமாறி அவர்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார்கள். இந்நிகழ்ச்சியில் நகர்மன்ற தலைமை விஜயா சௌந்தர பாண்டியன் ஆணையாளர் நாகராஜ் சுகாதார ஆய்வாளர் (பொ) மாதவராஜ் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர் கடையநல்லூர் நகராட்சி சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு கடையநல்லூர் நகராட்சி ஆணையர் லட்சுமி தலைமை தாங்கினார் சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் வரவேற்புரை ஆற்ற மேலாளர் பேச்சி குமார் பொறியாளர் மைதீன் அப்துல் காதர் உதவி பொறியாளர் அன்னம் வருவாய் ஆய்வாளர் ராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட நகர மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபுர் ரகுமான் அவர்கள் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களோடு அமர்ந்து உணவருந்தினார் நிகழ்ச்சியில் முன்னாள் நகர திமுக செயலாளர் மற்றும் 21 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் முகமது அலி மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் சுகாதார ஆய்வாளர் சிவா நன்றி கூறினார் தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சி காமராஜர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை துவக்கி வைத்துள்ளார்கள். தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் திங்கள் கிழமை காலை சிற்றுண்டியாக இட்லி, மெது வடை, சாம்பார் மற்றும் இரவு உணவாக இட்லி, கார சட்னி, சாம்பாரும், செவ்வாய்க் கிழமை காலை சிற்றுண்டியாக ரவா கிச்சடி, சாம்பார் மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, வெஜிடெபிள் குருமாவும், புதன் கிழமை காலை சிற்றுண்டியாக பொங்கல், சாம்பார் மற்றும் இரவு உணவாக ரவா கிச்சடி, சாம்பாரும், வியாழன் கிழமை காலை சிற்றுண்டியாக ரவா உப்புமா, தேங்காய் சட்னி மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, சென்னா மசாலாவும், வெள்ளிக் கிழமை காலை சிற்றுண்டியாக இட்லி, மெதுவடை, சாம்பார் மற்றும் இரவு உணவாக இட்லி, கார சட்னி, சாம்பாரும், சனிக்கிழமை காலை சிற்றுண்டியாக ரவா பொங்கல், சாம்பார் மற்றும் இரவு உணவாக ரவா உப்புமா, சட்னியும், ஞாயிற்றுக்கிழமை காலை சிற்றுண்டியாக சேமியா கிச்சடி, சாம்பார் மற்றும் இரவு உணவாக சப்பாத்தி, குருமாவும் தூய்மைப்பணியாளர்கள் ஆரோக்கியத்துடனும், சுகாதாரமாகவும் இருப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது. புளியங்குடி நகராட்சியில் இத்திட்டத்தின் மூலம் 243 தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறுவார்கள் கடையநல்லூர் நகராட்சியில் 367 பேர் இத்திட்டத்தின் மூலம்பயனடைவார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், புளியங்குடி கடையநல்லூர் நகராட்சி அலுவலர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் ஊரகவளர்ச்சித்துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் நிரப்ப வேண்டும், என 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தஞ்சை, பிப்.11-

தஞ்சை மாவட்டம் திருவையாறு தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் ஊரகவளர்ச்சித்துறையில் காலியாக உள்ள அனைத்து பணியிடங் களையும் நிரப்ப வேண்டும், உறுதியளிக்கப்பட்ட ஒய்வூதியத் திட்டத்தில் ஊராட்சி செயலர்களை




இணைக்க வேண்டும், ஏழு ஆண்டுகள் பணிமுடித்துள்ள பணிமேற்பார்வையாளர்கள் அனைவரையும் இளநிலை பொறியாளர் நிலைக்கு தரம் உயர்த்த வேண்டும் என்பது உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி காலவரையற்ற போராட்டம் செய்து ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடத்தினர்.

வட்டாரத் தலைவர் உஷாராணி தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் ஜெயந்தி கோரிக்கைகளை விளக்கி பேசினார். மாவட்ட மகளிர் ஒருங்கிணைப்பாளர்கள் ஜெயந்தி, ஜெய்சக்தி ,மாவட்ட செயற்குழு உறுப்பினர் திருநாவுக்கரசு வட்டார செயலாளர் உத்தமகுமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் வட்டார வளர்ச்சி அலுவலர் இந்திரா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்துக்குமாரசுவாமி, ராஜேந்திரன், ராஜம், பணி மேற்பார்வையாளர் கங்காதேவி, உதவியாளர்கள் சுப்புசுரேஷ், மோகன், பிரியதர்ஷினி, கோமதி, அலுவலக உதவியாளர் சீதா, கணினி இயக்குனர் புனிதா மற்றும் பலர் கலந்து கொண்டனர். வட்டார பொருளாளர் இளம்பரிதி நன்றியுரை ஆற்றினார்.




# அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் மதுரை மாவட்ட செயற்குழு கூட்டம்

மதுரை, பிப்.11-

அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் மதுரை மாவட்ட செயற்குழு கூட்டம் மாநில தலைவர் விஸ்வநாதன் ஆலோசனையின் பேரில், புரவலர் குருசாமி முன்னிலையில் மதுரையில் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ஐ. குருசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் பாலமுருகன் வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில், சங்கத் தொண்டர்கள் எதிர்காலத்தில் சபரிமலையில் சேவை செய்ய மத்திய, மாநில அமைப்புகள் தேவையான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த மண்டல, மகர விளக்கு விழா காலங்களில் திருப்பரங்குன்றம், கள்ளந்திரி பகுதிகளில் அன்னதானம் வழங்கிய நிர்வாகிகள், தொண்டர்கள், நன்கொடையாளர்களுக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது. மேலும் "ஓம் ஸ்ரீ ஐயப்பன்" மாத இதழுக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், கள்ளந்திரி சாஸ்தா முதியோர் இல்லம், கோசா மட பராமரிப்பு மற்றும் மாவட்ட வளர்ச்சிக்காக உறுப்பினர்கள் நன்கொடை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். முடிவில் சின்னச்சாமி நன்றி கூறினார்.

# கவுன்சிலர் கண்டுகொள்ளவில்லை: நேரடியாக முதல்வருக்கு மனு அளித்த கொடைக்கானல் மகளிர் குழுவினர்

கொடைக்கானல், பிப். 11-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அண்ணா சாலையில் இயங்கி வரும் அரசு மதுபானக் கடையால் (கடை எண்: 3149) பொதுமக்களுக்கும், குறிப்பாகப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கும் கடும் இடையூறு ஏற்பட்டு வருவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக உள்ளூர் 8வது வார்டு கவுன்சிலரிடம் பலமுறை முறையிட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், விரக்தியடைந்த மகளிர் சுய உதவிக் குழுவினர் தற்போது நேரடியாகத் தமிழக முதலமைச்சரின் முகவரி துறைக்குக் கோரிக்கை மனுவை அனுப்பியுள்ளனர்.

மனுவில் குறிப்பிட்டுள்ள முக்கியப் புகார்கள்:

* பாதுகாப்பற்ற சூழல்: மதுபானக் கடை அமைந்துள்ள பகுதி வழியாகவே குழந்தைகள் பள்ளிக்கும், பெண்கள் வேலைக்கும் செல்ல வேண்டியுள்ளது. அப்போது மதுபோதையில் இருப்பவர்கள் ஆபாசமாகப் பேசுவதும், வழிப்போக்கர்கள் மீது விழுவதும் பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

* போக்குவரத்து நெரிசல்: சுற்றுலாத் தலமான இங்கு மது ஏற்றி வரும் வாகனங்களைச் சாலையிலேயே நிறுத்துவதால், சுற்றுலாப் பயணிகளும் பொதுமக்களும் கடும் போக்குவரத்து நெரிசலுக்கு ஆளாகின்றனர்.

* நிம்மதியற்ற சூழல்: தினமும் இந்தப் பகுதியைக் கடப்பதே நரக வேதனையாக இருப்பதாகத் தெரிவித்துள்ள பெண்கள், இதனால் தங்கள் வாழ்வாதாரமும் நிம்மதியும் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

நடவடிக்கை பாயுமா?

உள்ளூர் மக்கள் பிரதிநிதிகளிடம் முறையிட்டும் பலன் கிடைக்காத நிலையில், "மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும்" என உருக்கமாக அம்மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. எளிய மக்களின் கோரிக்கையை ஏற்று அரசு மதுபானக் கடையை அகற்றுமா அல்லது வழக்கம் போலக் கோரிக்கை கிடப்பில் போடப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

# போதைப்பொருள் கடத்திய இருவர் குண்டர் சட்டத்தில் கைது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் உத்தரவு

சிவகங்கை, பிப்.11-

சிவகங்கை மாவட்டத்தில் பொது அமைதிக்குத் தங்கம் விளைவிக்கும் வகையிலும், சமூக நலனுக்கு எதிராகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இருவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களின் விவரம்:

1. மணிவண்ணன் (எ) குட்டைமணி (23):

காளையார்கோவில் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போதைப் பொருள் வழக்கில் (குற்ற எண்: 12/2026) இவர் கைது செய்யப்பட்டார். கீழவாணியங்குடியைச் சேர்ந்த இவர், போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் (NDPS Act) கீழ் கைது செய்யப்பட்டு, தற்போது குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

2. மணிஷ் (21):

இளையான்குடி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட போதைப்பொருள் வழக்கில் (குற்ற எண்: 21/2026) மேலவாணியங்குடியைச் சேர்ந்த மணிஷ் என்பவர் கைது செய்யப்பட்டார். இவரும் சட்டவிரோதமாகப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுப் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவித்ததாகக் குண்டர் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

காவல்துறை நடவடிக்கை:

சிவகங்கை மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அளித்த பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். போதைப் பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவும், இளைஞர்களைப் பாதுகாக்கவும் இத்தகைய கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகக் காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் மற்றும் போதைப்பொருள் விற்பனையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.




■ மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட யா.ஒத்தக்கடை நரசிங்கம் ஊராட்சியில் உள்ள அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 471.20 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் 20 வகுப்பறைகள் கட்டடங்களை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., ஆகியோர் திறந்து வைத்தார்.

# காவேரிப்பட்டணத்தில் அங்காளம்மன் பண்டிகை முன்னிட்டு அலகு (சலாக்கு) விற்பனை ஜோர்

கிருஷ்ணகிரி, பிப்.11-

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் வருடந்தோறும் விமரிசையாக நடைபெறும் அங்காளம்மன் - பூங்காவனத்தம்மன் மயான கொள்ளை மற்றும் சிவராத்திரி திருவிழா நிகழ்ச்சி, இவ்வருடம் வரும் 15, 16 ஆம் தேதிகளில் மிகப் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது. இந்தப் பெரும் பண்டிகையை முன்னிட்டு காவேரிப்பட்டணம் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.



இந்த மயான கொள்ளை திருவிழாவில் கலந்து கொள்ள ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் திரளுவது வழக்கம். தமிழ்நாடு மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்தர்களின் விரதம் - அதிர்ச்சி தரும் காணிக்கை நிகழ்ச்சிகள் இந்த திருவிழாவின் முக்கிய அம்சமாக, பக்தர்கள் தங்களின் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் காளி வேஷம் அணிதல் உடல் முழுவதும் எலுமிச்சம்பழம் குத்துதல் ஆட்டோ, கார், வேன் இழுத்தல் உரல் கற்கள் இழுத்தல் சங்கிலி இழுத்தல் வாயில் 5 அடி வரை அலகு (சலாக்கு) குத்திக் கொள்ளுதல் அல்லையில் அலகு குத்திக் கொண்டு பறந்து வந்து அம்மனுக்கு மாலை சாற்றுதல் போன்ற அசாதாரணமான ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

அலகு, சங்கிலி, காளி வேட உபகரணங்கள் - வியாபாரம் சூடுபிடிப்பு இந்த நிகழ்ச்சிகளுக்குத் தேவையான அலகுகள் (சலாக்கு), சங்கிலிகள், கத்திகள், காளி வேட முககவசங்கள் உள்ளிட்ட பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் ஆச் சாரிகள் மற்றும் வியாபாரிகள், தற்போது முழு வீச்சில் தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்ட அலகுகளை, வெள்ளி முலாம் பூசி புதுப்பித்து மீண்டும் விற்பனை செய்வதும் இந்தாண்டு அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் அலகு விற்பனை கடைகளில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

பாதுகாப்பு மற்றும் ஏற்பாடுகள் தீவிரம் பெரும் மக்கள் திரள்வை கருத்தில் கொண்டு, காவல் துறை, தீயணைப்பு துறை மற்றும் மருத்துவ குழுக்கள் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. நகராட்சி நிர்வாகமும் சுகாதாரப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளது.

அங்காளம்மன் அருளால் வேண்டுதல்கள் நிறைவேறும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையுடன், காவேரிப்பட்டணம் பகுதி மக்கள் மற்றும் பக்தர்கள் இந்த பண்டிகையை ஆவலுடன் எதிர்நோக்கி வருகின்றனர்.




# விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம்: கோட்டூரில் ட்ரோன் பயிற்சி

கோட்டூர், பிப்.11-

தேனி மாவட்டம் கோட்டூர் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இறுதியாண்டு பயிலும் மாணவி ஷர்மிலி, கிராமப்புற அனுபவத் திட்டம் (RAWE) கீழ் விவசாயிகளுக்கு வேளாண்மையில் ட்ரோன் பயன்பாடு குறித்த பயிற்சியை வழங்கினார்.

இந்த பயிற்சியில், பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பு, பயிர் கண்காணிப்பு, கால்நடை கண்காணிப்பு, மண் ஆய்வு உள்ளிட்ட பணிகளில் ட்ரோன் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக விளக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், இந்த பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகவும், தங்களது தோட்டங்களில் ட்ரோன் தொழில்நுட்பத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.



■ சிவகங்கை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள், உலக தர உணவு சேவை மற்றும் சூழலியல் சுற்றுலா திறன் பயிற்சி உள்ளிட்ட பல்வேறு திறன் பயிற்சிகளை பெறுவதற்கு, www.tahdco.com என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம் ரு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல் தெரிவித்துள்ளார்.




# கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

திண்டுக்கல், பிப்.11-

திண்டுக்கல் மாவட்ட காவல் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் அ.பிரதீப் அறிவுறுத்தலின்படி, மாவட்ட தலைமையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மகேஷ் தலைமையில், கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் அலுவலக அமைச்சு பணியாளர்கள் மற்றும் காவலர்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் உலக ஈரநிலங்கள் தினத்தை முன்னிட்டு ஈரநிலங்கள் குறித்து பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர் ராஜேஸ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்..



# குன்னூர் ஊராட்சி பேரூராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை செய்தித்துறை அமைச்சர் அரசு தலைமை கொறடா ஆகியோர் பார்வையிட்டனர்

குன்னூர், பிப்.11-

குன்னூர் ஊராட்சி பேரூராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை செய்தித் துறை அமைச்சர் அரசு தலைமை கொறடா ஆகியோர் பார்வையிட்டனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், உபதலை ஊராட்சி மற்றும் கேத்தி பேரூராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள வளம் மீட்பு பூங்கா மையங்களில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளை, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்கள், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டார்.

முதலாவதாக, தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட வள மீட்பு பூங்காவில் பேரூராட்சியின் மூலம் அனைத்து வீடுகளிலிருந்தும் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து மறுசுழற்சி செய்து உரம் உற்பத்தி செய்யும் பணிகளையும், மகளிர் உரம் உற்பத்தி நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உபதலை ஊராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வளமீட்பு மையத்தில், நீலகிரி மாவட்டத்திற்கு வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களுக்கு பர்லியார், குஞ்சப்பனை உள்ளிட்ட சோதனை சாவடிகளில் வசூலிக்கப்பட்ட பசுமை வரி நிதியிலிருந்து ரூ.65 இலட்சம் மதிப்பில் வளம் மீட்பு மையத்திற்கு தேவையான அனைத்து விதமான வசதிகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளதையும், இவ்வள மீட்பு மையத்திற்கு குன்னூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் உள்ள 6 கிராம ஊராட்சிகளிலிருந்து சேகரி க்கப்படும் பிளாஸ்டிக்குகளை தனிதனியாக பிரித்தெடுத்து, கிளீன் குன்னூர் அமைப்பின் மூலம் சிமெண்ட் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு அனுப்பபடவுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் அவர்கள், உதகை நகர்மன்ற தலைவர் வாணீஸ்வரி, துணைத் தலைவர் ரவிக்குமார், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) மணிகண்டன், கேத்தி பேரூராட்சி தலைவர் த. ஹேமமாலினி, கேத்தி பேரூராட்சி செயல் அலுவலர் புவனேஸ்வரி, குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சந்திரசேகர், விமலா, கிளீன் குன்னூர் அமைப்பினர் சமந்தா, மரு.வசந்தன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் ரூ.5 லட்சம் மோசடி செய்த வழக்கில் மேலும் ஒருவர் கைது

திண்டுக்கல், பிப்.11-

தேனி, போடியை சேர்ந்த சீனிவாசன் (42) இவரிடம் மர்ம நபர்கள் செல்போனில் தொடர்பு கொண்டு ரூ.50 லட்சம் கடன் வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை கூறி ரூ.5 லட்சம் முன் பணமாகத் தர வேண்டும் என்று திண்டுக்கல் நேருஜிநகா பகுதிக்கு வரவழைத்து ரூ.5 லட்சத்தை பெற்றுக் கொண்டு ரூ.50 லட்சம் தருவதாக ஏமாற்றியது தொடர்பாக நகர் மேற்கு காவல் நிலைய போலீசார் அழகேசன்(46), முருகபாண்டி(40) ஆகிய 2 பேரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.



மேலும் இது குறித்து நகர் DSP. கார்த்திக் மேற்பார்வையில் நகர் மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் மீனாட்சி தலைமையில் சார்பு ஆய்வாளர் காதர்மைதீன், நகர் குற்றத்தடுப்பு சிறப்பு சார்பு ஆய்வாளர் ஜார்ஜ் காவலர்கள் ராதா, முகமதுஅலி, விசுவாசம், சக்திவேல் ஆகியோர் கொண்ட தனிப்படையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு முக்கிய குற்றவாளியான திண்டுக்கல், NGOகாலனி, CTO- காலனியை சேர்ந்த முகமதுஅன்சார்(37) என்பவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161